செ.வெ.எண்.10/பிப்ரவரி பத்திரிக்கைச் செய்தி தேதி : 08.02.2016

**பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையினால் நடத்தப்படும் புத்தாக்கப் பயிற்சி வகுப்பினை தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.**



இப்பயிற்சியை துவக்கிவைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்தெரிவித்ததாவது: -

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று 08.02.2016 முதல் 12.02.2016 வரை தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்துத் துறைகளிலும் பணிபுரியும் உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் இந்திய அரசியலமைப்புச் சட்டம், தமிழ்நாடு குடிமைப்பணிகள் விதிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) 1973-ம் ஆண்டின் தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்து விதிகள், தமிழ்நாடு அடிப்படை விதிகள், தேர்ந்தோர் பெயர் பட்டியல் தயாரித்தல், பொதுமக்கள் தொடர்பு, அலுவலக நடைமுறைகள், முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள், தகவல் அறியும் உரிமைச்சட்டம், பதிவேடுகள், பணிப்பதிவேடுகள் பராமரித்தல், அலுவலக குறிப்பு, வரைவு கடிதம் எழுதுதல், 1978-ம் ஆண்டின் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் போன்றவை அரசு பணியாளர்களுக்கு அலுவலக நிர்வாகத்தில் தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், நடைமுறை விதிகளை முழுமையாக தெரிந்து கொள்ளவும், அரசு விதிகளை எளிதில் புரிய வைக்கும் நோக்கில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் கலந்து கொண்டுள்ள அனைத்து உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் நல்ல முறையில் பயன்படுத்தி தெளிவு பெற்று அரசு பணியினை செவ்வனே செயல்படுத்துவதே இப்பயிற்சியின் நோக்கமாகும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்தெரிவித்ததார்.

இப்பயிற்சியில் சேலம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.சின்னசாமி, ஓய்வுப்பெற்ற துணையாட்சியர் டியூக் பொன்ராஜ், கருவூலக்கணக்குத்துறை முன்னாள் துணை இயக்குநர் திரு.கந்தசாமி, சேலம் துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.திருமாவளவன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி.